


# 26.06.2026 செய்திகள்

## கடவுச்சீட்டு ஒருபோதும் குடியுரிமை ஆவணமாக கருதப்படவில்லை - மத்திய அரசு

- கடவுச்சீட்டு பயண ஆவணம் மட்டுமே ; குடியுரிமைக்கான ஆதாரம் அல்ல என்று வெளியுறவு அமைச்சகம் அண்மையில் குறிப்பிட்டது. கடவுச்சீட்டு சட்டம் 1967-இன் படி, ஒரு நாட்டில் குடியுரிமை இல்லாதவர்களுக்கும் கடவுச்சீட்டை வழங்க முடியும். ஏனெனில், கடவுச்சீட்டு ஓர் பயண ஆவணம் மட்டுமே. குடியுரிமைக்கான ஆதாரம் அல்ல.
- கடவுச்சீட்டு குடியுரிமை ஆவணம் அல்ல என்பதை மும்பை உயர்நீதிமன்றம் 2013-இல் அளித்த தீர்ப்பில் தெளிவுபடுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
- தேர்தல் ஆணையம் மேற்கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது (எஸ்ஐஆர்), ஆதார் குடியுரிமை. ஆவணம் அல்ல ; அடையாள ஆவணம் மட்டுமே என்று உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது. தற்போது கடவுச்சீட்டும் குடியுரிமை ஆவணம் அல்ல என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

## 9-ஆம் வகுப்பு புத்தகத்தில் அவசரநிலை பாடப்பகுதி

- 2007-ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது 12-ஆம் வகுப்பு பாடத்-திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தத் தலைப்பு இடம்பெற்றுவந்த நிலையில், தற்போது முதல் முறையாக 9-ஆம் வகுப்பு பாடப் புத்தகத்தில் இந்த நிகழ்வு ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
- 1975 முதல் 1977ஆம் ஆண்டு வரை நாட்டில் அவசரநிலை அமல்படுத்தப்பட்டபோது, இந்திய ஜனநாயகத்தில் மிகப்பெரிய சவால்கள் பதிவாகின. அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி தலைமையிலான அரசு மீது மக்களின் அதிருப்தி அதிகரித்தது.
- நிர்வாகச் சீர்கேடு குறித்த குற்றச்சாட்டுகள் பரவலான போராட்டங்களுக்கு வழிவகுத்தன. 1975-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25-இல் நாட்டில் தேசிய அவசர நிலை அமல்படுத்தப்பட்டது.
- அந்தக் காலத்தில், மக்களின் பெரும்பாலான அடிப்படை உரிமைகள் ரத்து செய்யப்பட்டன. பத்திரிகைகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. ஏராளமான அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர்.
- ஜனநாயக நிறுவனங்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளானதோடு. குடிமக்களின் சுதந்திரமும் கட்டுப்படுத்தப்பட்டது.

## அந்தியோதயா அன்னயோஜனா

- வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தில் ரேஷன் பொருள்கள் அளிக்கப்படுகின்றன. தற்போது மாதத்துக்கு 35 கிலோ அரிசி அல்லது கோதுமை இலவசமாக வழங்கப்படுகிறது.
- அதாவது, அந்தத் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு தலா 7 கிலோ உணவு தானியம் அளிக்க மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. இதன்படி, 2 பேர் மட்டுமே கொண்ட குடும்பம் எனில் தலா 7 கிலோ வீதம் மொத்தம் 14 கிலோ இலவச உணவு தானியமும், 5 அல்லது அதற்கு மேல் உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்துக்கு மாதம் அதிகபட்சம் 35 கிலோ இலவச உணவு தானியமும் வழங்க மத்திய அரசு யோசித்து வருகிறது.
- இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு 2013-ஆம் ஆண்டு உணவு பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை பரிசீலித்து வருகிறது.
- இந்தத் திருத்தம் குறித்து ஜுலை மாதம் 13-ஆம் தேதிக்குள் கருத்து தெரிவிக்கலாம் என்று பொதுமக்களை மத்திய உணவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்த சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு அமலுக்கு வந்தால், தற்போது ரேஷனில் அந்தியோதயா அன்னயோஜனதா திட்டத்தில் மாதந்தோறும் வழங்கப்படும் 35 கிலோ இலவச உணவு தானியம் நிறுத்தப்படும்.
- அதற்குப் பதிலாக, நபர் ஒருவருக்கு தலா 7 கிலோ வீதம் எனக் கணக்கிடப்பட்டு இலவச உணவு தானியம் விநியோகிகப்படும். அப்போது 5 உறுப்பினர்களுக்கும் குறைவாக உள்ள சிறிய குடும்பங்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவு தானியம் வழங்கப்படும் என்பதால், அவர்களுக்கான இலவச உணவு தானியத்தின் அளவு குறையக்கூடும்.